

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜனவரி 18, 2018 | புரட்சி 17 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00


## இந்த உண்மைகளைப் படியுங்கள்; பரப்புங்கள்; பகிருங்கள்!

# மாணவர்களே! இருள்சூழ்ந்து நிற்கிறது, நமது எதிர்காலம்!

*தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட – முற்போக்குச் சிந்தனை கொண்ட மாணவர்களே!*

*நமது எதிர்காலம் இருள்மயமாகி வருவதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். இந்தத் துண்டறிக்கையைப் படியுங்கள்!*

- மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வேலை இல்லாத் திண்டாட்டத்தில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களிலேயே தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்துவிட்டது என்ற அதிர்ச்சியான தகவல் தரப் பட்டிருக்கிறது. இந்தியாவில் வேலை கிடைக்காத இளைஞர்களின் தேசிய சராசரியைவிட (3.6) தமிழ்நாடு கீழாக நிற்கிறது (3.7).
- 2.45 இலட்சம் பொறியாளர்களும், 4307 டாக்டர் பட்டம் பெற்ற மாணவர்களும், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு காத்திருக் கிறார்கள்.
- 2017 மார்ச் 30 வரை வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்து காத்திருக்கும் நமது இளைஞர்கள் 81.30 இலட்சம் பேர். பதிவு செய்யாமலே வேலை தேடி அலைவோர் இதைவிடப் பன்மடங்கு என்பதை சொல்லத் தேவை இல்லை.
- மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட் டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டு 24 ஆண்டுகள் ஓடி விட்டன. இதற்குப் பிறகும் என்ன நிலை? ஜனவரி 1, 2017இல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களைப் பாருங்கள்!

24 மத்திய அமைச்சகங்களில் குரூப் ஏ பிரிவு அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம் தான். ‘பி’ பிரிவில் 14 சதவீதம். ‘சி’ பிரிவில் 11 சதவீதம். அதிகாரம் நிறைந்த முக்கிய முடிவுகளை செயல்படுத்தும் மத்திய அமைச்சரவை செயலகத்தில் ‘ஏ’ பிரிவு அதிகாரிகளாக இருக்கும் 64 பேரில் ஒருவர்கூட, பிற்படுத்தப்பட்டவரோ தாழ்த்தப்பட்டவரோ இல்லை.

தொடர்வண்டித் துறை பாதுகாப்புத் துறை, உள்துறை, நிதித் துறை போன்ற துறைகளில்தான் 91.25 சதவீத வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தகவல்களைத் தெரிவிக்கவே இந்த அமைச்சகங்கள் மறுத்துவிட்டன.

அது மட்டுமா? 2013இல் மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதில் மத்திய அரசுப் பணிகளில் பட்டியல் இனப் பிரிவினர் (எஸ்.சி.), பழங்குடிப் பிரிவினர் (எஸ்.டி.), பிற்படுத்தப்பட்டோருக்கான நிரப்பப்படாத பணியிடங்களை விரைவாக கண்காணித்து, 6 மாத காலத்துக்குள் இடங்களை நிரப்பும் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்று அந்த உத்தரவு கூறியது. தொடர்ந்து மத்திய வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், 2016க்குள் இடஒதுக்கீட்டின் கீழ் காலியாக இருக்கும் பணி யிடங்கள் நிரப்பப்படும் என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இரண்டுமே நடக்கவில்லை. செயல்படுத்தும் அதிகாரத்தில் இருப்பவர்கள் அனைவரும் பார்ப்பன உயர்ஜாதி அதிகாரிகள் தானே? எப்படி செயல்படுத்துவார்கள்?

### தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் என்ன நிலை?

இரத்தம் கொதிக்கிறது; நிலையைப் பாருங்கள்!

- 1.10.2015 நிலவரப்படி 18 தேசிய வங்கிகளில் மொத்தமுள்ள 450 மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 5 பேர் மட்டுமே. 1255 துணை மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 16 பேர் மட்டுமே. அதாவது 1.1 சதவீதம். அரசின் கீழ் உள்ள நான்கு ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் (இன்சூரன்ஸ் நிறுவனங்கள்) 43 மேலாளர் பதவிகளில் ஒரே ஒருவர்தான் பிற்படுத்தப் பட்டவர். 275 துணை மேலாளர் பதவிகளில் 3 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர். ‘தலித்’ நிலையை சொல்லவே வேண்டாம்.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களின் தலைவர்கள் ஜாதி சங்கம் வைத்துக் கொண்டு ஜாதிப் பெருமை பேசுகிறார்கள். ஜாதி மறுப்பு திருமணங்களைத் தடுக்கிறார்கள். ஆனால் பிற்படுத்தப்பட்ட ஜாதிகளைச் சார்ந்தவர்கள் இப்படி வேலை வாய்ப்பு உரிமைகள் மறுக்கப் பட்டு, வேலை வாய்ப்பின்றி தவிப்பதை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்களா? போராடுகிறார்களா? ஏன்? அவர்கள் சொந்த ஜாதிக்காரர்களை தங்களின் அரசியலுக்குப் பயன்படுத்தவே அணி திரட்டுகிறார்கள். சமூக நீதி பற்றியெல்லாம் அவர்களுக்கு கிஞ்சித்தும் கவலை இல்லை.

- நாம்தான் பார்க்கிறோமே; தொடர்வண்டி நிலையங்களில் அஞ்சலகங்களில், வங்கிகளில் வருமான வரித்துறை, சுங்கத் துறை அலுவலகங் களில் நமது தமிழ்நாட்டிலேயே இந்தி பேசும் பீகாரிகளும், உ.பி.காரர்களும்தான். தமிழ் பேசக் கூட தெரியாமல், நம்மிடம் இந்தியில் பேசு கிறார்கள். நமது தமிழ்நாட்டில் படித்து வேலை வாய்ப்பின்றி பல இலட்சம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களாக நாம் இருக்கும் போது நமது நாட்டுக்குள் ஏன் வடநாட்டுக் காரர்களை அதிகாரிகளாகக் குவிக்க வேண்டும்? இந்த நிலை தொடரலாமா?

அது மட்டுமா? ‘நீட்’ எனும் நுழைவுத் தேர்வை மத்திய அரசு நம்மீது திணித்தது. நுழைவுத் தேர்வு முறையே எங்களுக்கு வேண்டாம் என்று நாம் அறிவித்து ‘பிளஸ் டூ’ தேர்வு மதிப்பெண்களைக் கொண்டு மருத்துவப் படிப்பில் சேர்ந்தோம். ஆனால், நமது மாநில அரசு பாடத் திட்டத்தில் படிக்கும் 85 சதவீத மாணவர்களின் கல்வி முறையை ஒதுக்கித் தள்ளிவிட்டு 15 சதவீத மாணவர்களே படிக்கும் சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தின் கீழ் நீட் தேர்வை நடுவண் அரசு நமது விருப்பத்துக்கு மாறாக திணித்துவிட்டது. உச்சநீதிமன்றம் இதற்குத் துணை போனது. தலித் சமூகத்தில் ஏழைக் குடும்பப் பின்னணியில் பிறந்து குடிசை வீட்டில் படித்து 1200க்கு 1176 மதிப்பெண் பெற்ற நமது தலித் சகோதரி அனிதாவுக்கு மருத்துவக் கல்லூரியில் நுழைய முடியவில்லை. அவர் வாழ்க்கையையே முடித்துக் கொண்டு விட்டார். ‘நீட்’ என்ற சமூக நீதிக்கு எதிரான ‘கொடுவாள்’ நமது தலை மீது இப்போதும் தொங்கிக் கொண்டே இருக்கிறது.

### தமிழ்நாடு அரசு என்ன செய்கிறது?

அய்யகோ, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது. நமது மாநிலத்தில்தான் 69 சதவீத இடஒதுக்கீட்டை வைத்திருக்கிறோம். தமிழ்நாட்டில் நமக்கான வேலை வாய்ப்புகளை வழங்கி வந்த தமிழ்நாடு தேர்வாணையம் இப்போது திறந்த போட்டியில் தமிழ் தெரியாதவர்களும் இநதியா முழுதுமிருந்தும் நேபாளம், பூடான் போன்ற அண்டை நாடுகளைச் சார்ந்தவர்களும், தமிழ்நாட்டு வேலைக்கு மனுப் போடலாம் என்று கதவைத் திறந்து விட்டிருக்கிறது. இது நியாயமா? நேர்மையா? நாம், உ.பிக்கோ, பீகாருக்கோ, நேபாளத்துக்கோ, அம்மாநில அரசுப் பணிகளில் சேர முடியுமா? அப்படியே சேர்ந்தாலும் அம்மாநிலங்களில் தங்கி நமது வாழ்க்கையை ஓட்ட முடியுமா?

### இது மட்டுமா?

- தமிழ்நாட்டில் பல்தொழில்நுட்பக் கல்வி விரிவுரையாளர் பதவிக்கு 1058 விரிவுரையாளர் பதவிக்கு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் எழுத்துத் தேர்வுகள் நடத்தியது. இதில் வெளி மாநிலங்களைச் சார்ந்தவர்கள் ஏராளமாகத் தேர்வு செய்யப்பட்டனர். இந்தத் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கூடுதலாக மதிப்பெண்களைப் போட்டு மோசடியாக தேர்வு செய்துள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது.

உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் வந்துள்ளன. இந்த நிலையில் மோசடி அம்பலமான நிலையில் தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக் கின்றன. இயந்திரப் பொறியியல் எனும் மெக்கானிக்கல் என்ஜினியரிங் துறையில் தேர்வு செய்யப்பட்டவர்கள் 219 விரிவுரையாளர்கள் இதில் பொதுப் பட்டியலில் உள்ள 67 இடங்களில் 46பேர் வெளி மாநிலத்துக்காரர்கள். மின்னணு தொடர்பியல் எனும் ஈ.சி.ஈ.க்கான விரிவுரை யாளர்களாக பொதுப் பிரிவுக்கான 36 இடங்களில் 31 பேர் வடநாட்டுக்காரர்கள் தேர்வு செய்யப்பட் டுள்ளனர். நமது தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புக்காக உரிய தகுதி உடைய எத்தனையோ நமது மாணவர்கள் இருக்கும்போது மோசடிகள் செய்து வடநாட்டுக்காரர்களை இறக்குமதி செய்வது நியாயமா? நேர்மையா?

உச்சநீதிமன்றம்தான் இப்போது நாட்டிலே அதிகாரம் படைத்த அமைப்பு. இதில் ஒருவர்கூட பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்த நீதிபதி இல்லை. பிற்படுத்தப்பட்டோரும் இல்லை. உச்சநீதிமன்ற நீதிபதிகளே தலைமை பார்ப்பன நீதிபதியை வெளிப் படையாக அரசுக்கு ஆதரவாக செயல்படுவதாக இப்போது குற்றம்சாட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் தலித் மாணவர்களுக்கு பொறியியல் பட்டப் படிப்புக்காக தமிழக அரசு வழங்கி வந்த கல்வித் தொகை ரூ.85 ஆயிரத்தை இப்போது தமிழ்நாடு அரசு ரூ.50 ஆயிர மாகக் குறைத்துவிட்டது. மீதிப் பணம் செலுத்திப் படிக்க நமது தலித் மாணவர்கள் எங்கே போவார்கள்?

இப்படி ஏராளமாகப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். மாணவர்களே! காமராசர் காலத்திலிருந்து நமது தமிழ்நாட்டில் சமூகநீதிக்கான கதவு திறக்கப் பட்டு படிப்படியாக நாம் கல்வி வேலை வாய்ப்புகளைப் பெற்றோம். இப்போது நமது எதிர்காலம் இருண்டு கிடக்கிறது.

அம்பேத்கர், பெரியார் போராடிப் பெற்றுத் தந்த உரிமைகள். காமராசர் காலத்திலிருந்து அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலம் வரை பாதுகாக்கப்பட்ட உரிமைகளை இழந்து வருகிறோம்.

மாணவர்களே! இந்த செய்திகளைப் பரப்புங்கள். சமூக வலைதளங்களில் பதிவு செய்யுங்கள். சக மாணவர்களிடம் விவாதியுங்கள்!

இது கட்சிப் பிரச்சினையல்ல; தேர்தல் பிரச்சினை யல்ல; எல்லாவற்றையும் கடந்த நமது எதிர்கால வாழ்வியல் பிரச்சினை.

**விழிப்புணர்வை உருவாக்குங்கள்!**

**சமூக நீதிக்கான மாணவர்கள் இயக்கத்தை வலிமையாக்குவோம்;**

**இது நமது சமூகக் கடமை;**

**இது நமது வாழ்வியல் உரிமை.**

**– தமிழ்நாடு மாணவர் கழகம்**

(மாணவர் பரப்புரை இயக்கத்துக்கு தோழர்கள் – இதை துண்டறிக்கையாகப் பயன்படுத்தலாம்.)

# நிறுவனமயமாக்கப்பட்ட பெரியார், தத்துவமயமாக்கப்பட வேண்டும்!

‘ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்’ (பாரதி புத்தகாலயம்), ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?’ (நியூசெஞ்சுரிபுத்தக நிலையம்) ஆகிய இரண்டு பெருந்தொகுப்புகளினூடாக பரவலான கவனக் குவிப்பைப் பெற்றவர்; இன்னும் பல படைப்புகளை உருவாக்கும் ஆயத்தப்பணிகளில் இருக்கிறார்.

சூழலியலாளர். இயற்கைமுறை விவசாயத்திலும், மீன் வளர்ப்பிலும் முனைப்புடன் இருப்பவர்.

தன்னுடைய இயற்கை வேளாண் பண்ணையில் ஙி எழில் கொஞ்சும் சூழலில் பல கேள்விகளுக்கு மடைதிறந்த வெள்ளமென பதிலளித்தார்.

அவர் எழுத்தாளராக உருவானது எப்படி? ஏன்? எந்த சூழல் தன்னை மாற்றியது உள்ளிட்ட பல விவரங்கள்..தன் உடல்நலத்தை பெருமளவுக்கு கண்டு கொள்ளாமல் பெரியாரை பெரியாராகவே அறிமுகப்படுத்தும் அவரது முனைப்பு தமிழ்ச் சமூகம் கண்டு கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இனி உரையாடலிலிருந்து .

*தங்களைப்பற்றிச் சொல்லுங்களேன் ?*

என் தந்தையார் ராணுவத்தில் பணியாற்றிவிட்டு பொன்மலை ரயில்வேதுறையில் பணியாற்றினார். அய்யா பெரியாருடனும், மணியம்மையாருடனும் ஆசிரியர் வீரமணி அவர்களுடனும் நெருக்கமான தொடர்பில் இருந்தவர். பழைய தஞ்சை மாவட்டத்தில் சுயமரியாதை இயக்க, திராவிடர்கழகத்தின் வரலாற்றில் அவருக்கென்று ஓர் இடமுண்டு. அப்பாவும் அம்மாவும் அக்காலத்திலேயே சுயமரியாதைத் திருமணம்செய்துகொண்டவர்கள்.. அது போலவே நானும், எனது துணைவியாரும் காதல், சாதி மறுப்பு, சுயமரியாதை திருமணம்தான், அதையும் ஆசிரியர் வீரமணி அவர்கள்தான் 1982-ல் செய்துவைத்தார். தஞ்சையில் உள்ள பெரியார் நூற்றாண்டு தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றிவிட்டு பின்னர் பணியை துறந்து எழுத்துப்பணியிலும், தற்போது கொஞ்சம் விவசாயத்திலும் ஈடுபட்டு வருகிறேன்..

*எழுத்துலகில் நுழைந்தது எப்போது?*

என் எழுத்து என்பது துவக்க காலத்தில் கவிதையில் தான் ஆரம்பித்தது. அதுவும் நான் கோவையில் தொழில்நுட்பக் கல்வி பயில்கின்றபோதுதான். பின்னர் கவியரங்குகளில் பங்கேற்றேன் சமூக கோபம், அதன் பிணிகள் அதன் தீர்வுக்கான வழிகளில் பகுத்தறிவின் தேவை, பெரியாரின் கொள்கைகள் தான் என் கவிதைகளில் மையக்கருவாக இருக்கும்.

கவிதைகளோடு அவ்வப்போது சிற்றிதழ்களுக்கும், ‘விடுதலை’க்கும் சில கட்டுரைகளை அனுப்புவேன். ஆனாலும் எனக்குள் ஒரு பெரும் வேட்கை இருந்தது. ஏதாவது கூடுதலாக செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் தான் சங்கமித்ரா, இரா.இரத்தினகிரி, சின்னப்பா போன்ற தோழர்கள், ஏற்கெனவே என்னிடத்தில் இருந்த வாசிப்பினை அதிலும் குறிப்பாக பெரியாரை ஆழமாக வாசிக்கச் சொன்னார்கள். அது எனக்கு உந்துதலானது. என் தந்தையிடமிருந்தும் என்னுடைய மாமனாரிடமிருந்தும் அவர்கள் சேகரித்திருந்த குடிஅரசு இதழ்கள், துண்டறிக்கைகள், பிரசுரங்கள், புத்தகங்கள், தரவுகள் என நிறைய கிடைத்தன. அவற்றை வாசித்து பார்த்த பிறகு தான் பொது வெளியில் பெரியார் பற்றி எதிர்மறையாக உலா வரும் கருத்துகளை எதிர்கொள்ள வேண்டுமெனவும், பதில் சொல்ல வேண்டுமென்ற தேவையினையும் உணர்ந்தேன்.

அவர் ஏன் வெறும் கடவுள் மறுப்பாளராக மட்டுமே, பார்ப்பன எதிர்ப்பாளராக மட்டுமே சித்தரிக்கப்படுகிறார் என்பதும், அதையும் தாண்டி இந்தச்சமூகம் மேம்பட அவர் சொல்லிய கருத்துகள் - இன்றும் ஏன் அவர் தேவைப்படுகிறார் என்பதை தமிழ் சமூகம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவும் மேலும் மேலும் ஆழமாக வாசித்தேன் என்பதைவிட அவரை சுவாசித்தேன் என்பதுதான் சரியாக இருக்கும். அப்படி பெரியாரை ஆழமாக வாசித்ததின் வெளிப்பாடுதான் இரு பெருந் தொகுப்புகள்.

*‘ஈ.வெ. இராமசாமி என்கின்ற நான்’ தொகுப்பைப் பற்றி*

பெரியாரிய தொகுப்பிற்கு தோழர் ஆனைமுத்து அவர்கள்தான் முன்னோடி. ஆனாலும் பெரியாரிய தொகுப்பில் ஒரு போதாமை இருப்பதை உணர்ந்தேன். அந்த இடைவெளியிலிருந்து ஒரு புதிய கோணத்தில் பெரியாரை தொகுக்க வேண்டும் என எண்ணினேன்.

பெரியார் எவ்வாறு, எங்கு தன்னை முன் நிறுத்திக் கொண்டார் என்பதும் அவர் இச்சமூகத்தில்



**நேர்காணல்:**
**பசு கவுதமன்**

இருக்கும் பிரச்சனைகளுக்கு பல்வேறு காலகட்டங்களில் எப்படி தன்னுடைய ஆளுமையினை செலுத்தியுள்ளார் என்பதையும் தேடினேன்.

ஓர் ஆளுமையின் எழுத்துகள் அல்லது பேச்சுகள் அந்தச்சூழலுக்கு ஏற்ப பொருத்தப்பாட்டோடு எடுத்துகொள்ளப்படவேண்டும். ஆகவே இந்த தொகுப்பினை எழுதும் போது அய்யா தன்னை எப்படி பொதுவெளியில் காட்டிக் கொண்டாரோ அது முதலில் பதிவாக்கப்பட வேண்டும் என்பதற்காக பல தரவுகளைத் தேடித்தேடி எந்த தவறும், விடுபடுதலும் இருக்கக்கூடாது என்பதற்காக உழைத்ததின் விளைவு தான் ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்.

இந்தத் தொகுப்பு மற்ற படைப்புகளிலிருந்து ஏன் வேறுபடுகிறது என்றால் யாரும் பெரியாரை, பெரியாராக படிக்கவில்லை அம்பேத்கரை அம்பேத்கராக யாரும் படிக்கவில்லை. எல்லாரும் அந்த ஆளுமைகளின் பேச்சை, எழுத்தை மேற்கோள்களாகவே பேசினார்கள், எழுதினார்கள் தங்களுடைய தேவைக்கேற்ப. ஆனால், இந்த தொகுப்பு பெரியார் எனும் ஆளுமையின் தன்நிலைப் பதிவாக- மேற்கோள்களாக சொல்லாடல்களாக இல்லாமல் அவர் பேசியது எழுத்தாக பதிவு செய்தது. மிக முக்கியமாக பொருள் மாறாமல், சாரம் குறையாமல் அப்படியே வாசகர்களுக்கு மறுபதிவு செய்து கொடுத்தேன்.. ஏனென்றால் பெரியார் பெரியாராகப் படிக்கப்பட வேண்டும் என்பதோடு நிறுவனமயமாக்கப்பட்ட பெரியார் தத்துவமயமாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில். காரணம் அவரின் பல தத்துவங்கள் தேங்கி நிற்கின்றன. அது இன்றைய அரசியல் சூழலில் பரவலாக்கப்பட வேண்டும். அதைத்தான் இந்த தொகுப்பு செய்தது.

*பெரியார் எனும் ஆளுமை முழுவதும் படிக்கப்படவில்லை என எப்படி சொல்லுகிறீர்கள் ?*

உண்மை. பெரியாரை முழுதும் வாசித்தால் தான் அவரின் உயரம், நீளம், ஆழம், அகலம் என அனைத்தும் தெரிய வரும்.. உதாரணமாக ஒன்றை குறிப்பிடுகிறேன். தமிழகத்தில் இயங்கும் பல தமிழ் தேசிய அமைப்புகள் பெரியார் தமிழை காட்டுமிராண்டி மொழி என்று சொல்லிவிட்டார் என்று விமர்சனம் செய்தார்கள் இன்னும் செய்கின்றார்கள். அதுவா உண்மை. சங்கராச்சாரியார் தமிழ் மொழியை ‘நீச’ மொழி என்றதற்கும்; பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளைப் பார்த்து ‘உருப்பட மாட்டே’ என்று சொல்வதைப் போல அக்கறையிலிருந்து வரும் கோப வார்த்தையைப் போலத்தான் பெரியார் சொன்னார். ஆனால் மேலோட்டமாக பெரியாரை போகிற போக்கில் படித்து விட்டு அரசியல் செய்வதால் வந்த வினை.

அதைப்போலவே சாதிய கொடுமைகள். தீண்டாமை பிரச்சனைகள் குறித்து அவர் எந்தவொரு எதிர் வினையாற்றவும் இல்லை என்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரியாக அவரைக் கட்டமைப்பதில் அன்றிலிருந்து இன்று வரைக்கும் முயற்சித்து பலர் பேசுகின்றனர். அது உண்மையா . இடைநிலை சாதிகளில் உள்ள மக்களிடத்தில் பேசும்போதுதான் அய்யா சொன்னார், “பறையன் பட்டம் போகாதவரை உன் சூத்திரப்பட்டமும் போகாது” என்று சமூகநிலையை தெளிவாக வரையறுத்தார்.

இப்படி பல விசயங்களைச் சொல்லலாம். அப்படி சொன்னவரின் எழுத்துகள், பேச்சுகளை முழுமையாக உள்வாங்காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவரை மேற்கோளில் காட்டுவது- அவர் பதிவிட்ட விசயங்களில் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பலவற்றை விடுவது நாகரீகமல்லவே. அதனை உடைக்க வேண்டும் என்பதற்காகவே எடுத்த முயற்சிகளின் பலன் தான் என் தீவிர வாசிப்பு. அதனின் பயனாக வந்ததுதான் இந்தப் படைப்பு.

அதே போல பெரியார் தமிழின் சங்ககாலப் படைப்புகளை படிக்காதவர் என்றும். தொன்மை வாய்ந்த தமிழின் மேன்மை அறியாதவர் என்றும் கலை, இலக்கியப் படைப்புகளை அவர் தொட்டது கூட கிடையாது என்றும் அவரை விமர்சிப்பவர்கள் உண்டு. ..அது உண்மையா என அவரை ஆழமாக படித்தால் தானே புரியும். என் தொகுப்பின் மூலம் அந்த பொய் பிரச்சாரங்களை எல்லாம் உடைத்துள்ளேன்.. அவர் தொடாத இலக்கியம் இல்லை. உதாரணமாக, ராமாயணத்தின் அனைத்துப் பிரதிகளையும் அவர் வாசித்துள்ளார். அப்படி படித்ததால் மட்டுமே அவரால் அதை தர்க்கம் செய்ய முடிந்தது. அதற்கு எதிராக அறிவியல் பூர்வமான எதிர் கருத்துகளை பிரச்சாரம் செய்ய முடிந்தது. அதன் விளைவாகத்தான் இராமயாண ஆராய்ச்சி நூலை எழுதினார் பெரியார். அதே போலத்தான் . சிலப்பதிகாரத்தையும் மேலும் பல இலக்கியங்கள் குறித்தும் அவரால் தீர்மானகரமாக பேச முடிந்தது. அடிப்படையில் அவர் ஓர் இலக்கியவாதியும் கூட. அதற்குச் சான்றாக அவரின் பல பதிவுகளைச் சொல்ல முடியும். ஒரு கட்டுரையில் தான் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகுவதற்கான காரண காரியத்தை எத்தனை அழகியலோடு விளக்குகிறார்.. நான் ஏன் காங்கிரசிலிருந்து விலகினேன் என்று சொல்லும் போது, நான் ஏன் காங்கிரசில் சேர்ந்தேன் என்பதையும் சொல்ல வேண்டுமல்லவா என்று ஈ.வெ.ராவுக்கு தோன்றியது என்ற தலைப்பில் எழுதுகின்றார். அதைப் படியுங்கள். அப்போது தெரியும் அவர் யாரென்று? பெரியார் இலக்கியம் என்ற ஒன்றையே வரையறுக்கலாம் என்பது என் திடமான முடிவு. பெரியார் எந்த ‘இலக்கியக் கொம்பர்களுக்கும்’ இளைத்தவரல்ல.

(தொடரும்)

## ‘சூடிக் கொடுத்த சுடர்க்கொடி’ என்றால் அர்த்தம் என்னவோ?

கவிஞர் வைரமுத்துவுக்கு எதிரான எச் ராஜாவின் கொலைவெறிப் பேச்சை கேட்டேன். அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதி என்பது மேலும் நிச்சயமாகிறது. “ஆண்டாள் ஒரு தேவதாசி” என்று ஓர் ஆய்வாளர் கூறியதை கவிஞர் மேற்கோள் காட்டியதற்குத்தான் “அவரது தலை உருள வேண்டும்” என்று தன் சகாக்களை தூண்டிவிடும் வகையில் பேசியுள்ளார். இது ஆய்வுரிமை மீது, கருத்துரிமை மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல். ஆண்டாளைப் பற்றிய செய்திகளுக்கு ஆதாரம் அவரின் பாடல்கள் மற்றும் அவரைப் பற்றிய வைணவ நூல்களின் கூற்றுக்கள். அவற்றைப் படிக்கிற எவருக்கும் ஆண்டாள் ஒரு தேவதாசியாக இருக்கலாம் எனும் சந்தேகம் வராமல் போகாது. எச் ராஜாவே “சூடிக் கொடுத்த சுடர்க்கொடி” என்று பெருமையோடு பேசியிருக்கிறார். அதன் அர்த்தம் என்னவோ? தான் சூடிய மாலையை விஷ்ணுவிற்கு அனுப்பினால் அதன் பொருள் அந்தக் கடவுளை மணந்தார் என்பது. பொட்டுக்கட்டும் சடங்கில்தான் ஒரு கடவுளை மணப்பது வரும். அப்புறம், தனது பாடல்களில் விஷ்ணு தன்னை உறவுகொள்ள வரவேண்டும் என்று உருகி உருகிப் பாடியிருக்கிறார். இதர பெண்களைப் போல் சாதாரண மணவாழ்வை ஆண்டாள் வாழவில்லை என்றே வைணவ நூல்கள் கூறுகின்றன. இவற்றைக் கொண்டு ஓர் ஆய்வாளர் அத்தகைய ஒரு முடிவுக்கு வந்தால் அது பாவமா? தேவதாசி முறையே இல்லை என்று இந்த மனுவாதியால் கூற முடியுமா? அதை கடவுளின் பெயரால் பராமரித்தது வருணாசிரமவாதிகளே என்பதற்கு ஆழ்வார்கள் வாழ்வு பற்றிய “குருபரம்பரை” நூலிலேயே ஆதாரம் உள்ளது. எச் ராஜாவின் இந்த கொலை மிரட்டலை அனுமதித்தால் மெய்யான வரலாற்று ஆய்வுகளே தமிழகத்திலும் காணாமல் போய்விடும். தமிழகமும் வடமாநிலங்கள் போல பிராமணய உத்தரவுகளால் நிறைந்துவிடும். இந்து மதம் பல பிரிவுகளை உள்ளடக்கியது. அதில் ஒரு பிரிவுதான் பிராமணிய மதம். அதைச் சார்ந்தோர் “இந்து மதம்” என்பதன் பெயரால் உத்தரவுகள் போடுகிறார்கள். எச். ராஜா போன்றவர்கள் காத்தவராயனையும் மதுரைவீரனையும் முனியாண்டியையும் கருப்பணசாமியையும் வழிபடுவார்களா? மாட்டார்கள் என்பதை பஞ்சம, சூத்திர இந்துக்கள் உணர்ந்து கொண்டால் இவரைப் போன்றவர்களின் உண்மை சொரூபம் வெளிப்பட்டுப் போகும்.

**தோழர் அருணன்**
**(முகநூல் பதிவு)**

# மக்கள் போராளி முகிலனுக்கு குறி வைத்து நசுக்கும் காவல்துறை!

இயற்கை வளங்களை சுரண்டும் கும்பலுக்கு எதிராகவும் மக்களைப் பேரழிவுக்கு உள்ளாக்கும் அணுமின்சாரம், மீத்தேன் போன்ற திட்டங்களையும் எதிர்த்து மக்கள்ப் போராட்டங்களை நடத்தி வரும் போராளி முகிலன் தொடர்ந்து காவல்துறையால் குறி வைத்து சித்திரவதைக்கும் முறைகேடான கைதுக்கும் உள்ளாகி வருகிறார். ஆனாலும், அவரது கொள்கை உறுதியை இந்த அடக்குமுறைகள் சித்திரவதைகள் அசைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

மக்கள் உரிமைக்காகப் போராடும் போராளிகளை காவல்துறையும் அரசும் எவ்வளவு மூர்க்கமாக ஒடுக்குகிறது என்பதை வெளிப்படுத்த புரட்சிப் பெரியார் முழக்கம் முகிலனின் இந்த கடிதத்தை வெளியிடுகிறது. போராளி முகிலன் ஒரு பொறியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் முகிலன். சிறையிலிருந்து நெல்லை மாவட்டம் வள்ளியூர் குற்றவியல் நடுவருக்கு (மாஜிஸ்திரேட்) சிறை அதிகாரி வழியாக அனுப்பிய கடிதம் இது: (4.1.2018 இதழ் தொடர்ச்சி)

“கரூர் மாவட்டம் வாங்கலில் 14.12.2016 அன்று மாலை ‘புதிய மணல்குவாரி அமைக்கக் கூடாது, ஏன்?’ என்ற ஆலோசனைக் கூட்டம் முடிந்து, வாங்கலில் இருந்து கரூர் நோக்கி 3 குழந்தைகள் உள்பட 6 பேருடன் வந்து கொண்டு இருக்கும்போது எங்கள் காருக்கு முன்புறம் ஒரு மணல் லாரியை செல்ல வைத்தும், எங்கள் காரை சுற்றி 6 பைக்குகளில் வந்த 12 பேர் பைப்பை கீழே போட்டு காரை சுற்றி வளைத்து நிறுத்தி, காரினுள் இருந்த என்னை கார் கதவை உடைத்து வெளியே இருந்து இழுத்து அடித்தும், என் குரல்வளையை நசுக்கியும், என்னுடன் இருந்தவர்களையும் தாக்கினர். காரில் இருந்த குழந்தைகளின் அலறலால் ஊர் மக்கள் கூடவே என்னை விட்டுவிட்டு தப்பி ஓடினர். சம்பவம் நடைபெற்ற உடனேயே கரூர் மாவட்ட நிர்வாக செயல்துறை நடுவரும், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவருமான கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப. அவர்களிடம் நேரில் சென்று மனு கொடுத்தேன். சட்ட விரோத மணல் கொள்ளையர்களின் தூண்டுதலில் அவர்களின் அடியாட்களால் என்னை கொலை செய்ய முயன்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு வாங்கல் காவல் நிலையத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

26.10.2016 அன்று கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து எங்களது செயல்பாட்டால் சட்டவிரோத மணல் அள்ளுவது நெருக்கடிக்கு உள்ளாகி வந்ததால், சட்ட விரோத மணல்குவாரியை அரவக்குறிச்சி டி.எஸ்.பி. கலைச் செல்வன், வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர் செட்ரிக் மேனுவல் ஆகியோருடன் பார்வையிடச் சென்ற தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இந்திய பொதுவுடமைக் கட்சி (சி.பி.ஐ.), தேசியக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் ஆகியோருடன் நாங்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கடம்பங்குறிச்சி, தோட்டக்குறிச்சி ஆற்றில் மணல் அள்ளிய இடம் வரை சென்றபோது சட்டவிரோத மணல் கொள்ளையர்களில் ஈடுபட்டவர்களின் அடியாட்கள் எங்களை கற்களை வீசித் தாக்கினர். காவல்துறையினரின் காவலோடு நாங்கள் இருந்த இடத்தை நோக்கி திரும்பியபோது ‘முகிலனைக் கொல்லுங்கடா’ என்று என்னை நோக்கி சரமாரியாகக் கற்களை எறிந்தனர். என்னை பாதுகாக்க என்னை நோக்கி வந்த கல்லைத் தமிழ்கவி என்பவர் பாய்ந்துச் சென்று தடுக்க அவரது உடல் கடுமையாகப் பாதிப்படைந்தது. இதுவும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது.

கடந்த இரு மாதங்களாக தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களில் நடைபெற்று வரும் சட்டவிரோத நிலத்தடி நீர் கொள்ளையை எதிர்த்துப் போராடும் நிலத்தடி நீர் பாதுகாப்பு இயக்கத்தில் அங்கம் வசிக்கும் அமைப்பாக இருந்து செயல்பட்டு வருகிறோம். கடந்த 13.8.2017 ஞாயிறு அன்று சட்ட விரோதமாக நிலத்தடி நீரைக் கொள்ளையடித்து செல்லும் 30க்கும் மேற்பட்ட லாரிகளைத் தூத்துக்குடியில் மறித்து பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்து கைதானோம். 21.8.2017 அன்று சட்டவிரோத நிலத்தடி நீர் கொள்ளையைத் தடுக்காத தினசரி 10 கோடி லிட்டர் தண்ணீர் சட்டவிரோதமாக ஸ்டெர்லைட் DCW ஆலைகளுக்கு எடுப்பதைத் தடுத்து நிறுத்தாத மாவட்ட நிர்வாகத்தைக் கண்டித்து முற்றுகையிட்டு தூத்துக்குடியில் கைதானோம். 15.9.2017 வெள்ளிக்கிழமை அன்று பல்வேறு அரசு ஆவணங்கள் நீதிமன்ற உத்தரவுகளுடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) வீரப்பனையும், தூத்துக்குடி சார் ஆட்சியாளரையும் நேரில் சந்தித்து நிலத்தடி நீர் கொள்ளையை தடுத்து நிறுத்த மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைக் குறித்துப் பேசி வந்தேன். இதனால் சட்ட விரோதமான நிலத்தடி நீரை எடுத்து பலனடையும் பலமும் என்மீது கோபத்துடன் உள்ளனர்.



18.9.2017 திங்கள் அன்று நிலத்தடி நீர் கொள்ளையை தடுத்து நிறுத்தாததால் ஆடு, மாடுகளுடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டத்தை அறிவித்து இருந்தோம். ஸ்ரீவைகுண்டத்தில் போராட்டத்தில் பங்கேற்க வந்த எங்களை போராட்டக் குழுவினர் வரவேற்று அழைத்துச் செல்லும்போது ஸ்ரீவைகுண்டத்தில் வைத்து என்னையும், அணுசக்தி எதிரான மக்கள் இயக்கம் சுப. உதயகுமார், எஸ்.டி.பி.அய். கட்சி தமிழகத் தலைவர் தெஹலான் பாகவி உள்பட சுமார் 200க்கும் மேற்பட்டோரை கைது செய்து ஸ்ரீவைகுண்டம் ஏ.எல். திருமண மண்டபத்தில் வைத்திருந்தனர். 18.9.2017 திங்கள் மாலை 18.15 (6.15) மணிக்கு எங்கள் அனைவரையும் விடுதலை செய்தனர்.

அங்கிருந்தவர்களுடன் பேசிவிட்டு ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து இரவு 19.00 (7.00) மணிக்கு விடைபெற்றுக் கொண்டு எனது நண்பர் உடன்குடி குணசீலன் வேலன் அவர்களுடன் இருச் சக்கர வாகனத்தில் ஆழ்வார் திருநகரி நோக்கிப் புறப்பட்டேன். ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றின் தென்பகுதியில் கரையில் சிமெண்ட் தடுப்புச் சுவர் முடிந்த பகுதியில் எனது நண்பர் குணசீலன் வேலன் அவசர தேவைக்காக இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். வாகனத்தில் இருந்து அவருடன் கீழே இறங்கி நின்றிருந்த என் அருகே திடீரென ஒரு ஜீப் போன்ற நான்கு சக்கர வாகனம் வந்து நின்றது. அதில் இருந்து ஒரு பெண் உள்பட நால்வர் சிவில் உடையில் இறங்கி ஆறு பேரும் சேர்ந்து என்னை நிமிர விடாமல் தரதர என இழுத்தனர். என்னைச் சுற்றி வளைத்துப் பிடித்து தூக்கி நான்கு சக்கர வண்டியில் ஏற்றினர். காப்பாற்றுங்கள் என சத்தமிட்டும் கடுமையாக எதிர்த்துப் போராடினேன். எனது காலின் சில இடங்களில் அவர்களால் மிதிக்கப்பட்டு காயம் ஏற்பட்டது. என்னைக் காப்பாற்ற முயற்சித்த எனது நண்பர் குணசீலன் வேலனை தள்ளிவிட்டே என்னை வண்டியில் ஏற்றினர்.

என்னைப் பிடித்து தூக்கிச் சென்றவர்கள் வாகனத்தை தென்திருப்போரை வழியாக தூத்துக்குடி செல்லாமல் வழி தவறி காயாமொழியை நோக்கி ஓட்டிச் சென்றுவிட்டனர். காயா மொழியில் இருந்து மெஞ்ஞானபுரம், பரமன் குறிச்சி, திசையன்விளை வழியாக என்னை கூடன்குளம் காவல்நிலையம் கொண்டு வந்தனர். கூடன்குளம் காவல்நிலையம் என்னைக் கொண்டு வந்த பிறகே, வெள்ளை வேன் கடத்தல் போல் என்னை சிவில் உடையில் தூக்கி கடத்தி வந்தவர்கள் காவல்துறையினர் என அறிய முடிந்தது.

நான் தூத்துக்குடி, நெல்லை மாவட்டத்தில் பல்வேறு மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து, சட்டவிரோதமாகச் செயல்படும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு, பல்வேறு கனிமக் கொள்ளைக்கு, நிலத்தடி நீரை சட்டவிரோதமாக எடுத்து செயல்படும் ஸ்டெர்லைட், தாரங்கதாரா (டி.சி.டபுள்யூ), ஆலைகளுக்கு எதிராகவும், உடன்குடி பகுதி சுற்றுச் சூழலினை அழித்து வந்த பி.எஸ்.வி. மீன் அரவை ஆலையை எதிர்த்தும் போராடி வருபவன். ஸ்ரீவைகுண்டம் அணைப் பகுதியில் தூர்வாருகிறோம் என ஆற்று மணல் கொள்ளையடிப்போரை எதிர்த்து விடுதலைப் போராட்ட வீரரும், பொது வுடமை இயக்க தலைவருமான அய்யா நல்லக் கண்ணுவுடன் இணைந்து செயல்பட்டு வருபவன். படுக்கப்பத்து பகுதியில் சட்டவிரோதமாக தாது மணல் அள்ளிய லாரிகளை திருச்செந்தூர் கோட்டாட்சியர் பிடித்து சான்றுடனும் காவல்துறை யிடம், வட்டாட்சியரிடமும் ஒப்படைத்தும் வழக்குப் போடாமல் வைத்திருந்ததைக் கண்டித்து பல்வேறு துறை அதிகாரிகளிடம் அழுத்தம் கொடுத்து வழக்குப் போட வைத்தவன்.

தாமிரபரணிஆற்றில் பெப்சி, கோக் ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை எதிர்த்து பல்வேறு ஆவணங்களைத் திரட்டியும், அதை எதிர்த்துப் போராடும் அமைப்புகளோடு இணைந்து செயல்பட்டு வருபவன். நாங்குநேரி பகுதியில் சட்ட விரோதமாக அனுமதி கொடுக்கப்பட்ட கிரானைட் குவாரியை வெளியே எதிர்த்துப் போராடி வருபவன். நெல்லை மாவட்டத்தில் கிரானைட் குவாரியை எதிர்த்துப் போராடி வருபவன். நெல்லை மாவட்டத்தில் மிகப் பெரிய தொழிற்சாலையாக உள்ள ‘தி இந்தியா சிமெண்ட்’ ஆலை முறைகேடான முறையில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைக்க அரியலூர் பெரிய திருகோணம் பகுதியில் அமைய இருப்பதை மக்களைத் திரட்டி எதிர்த்து வருபவன். உடன்குடி மணிநகர் பகுதியில் ஓ.என்.ஜி.சி. ஆய்வுப் பணியை மக்களைத் திரட்டி தடுத்து நிறுத்த துணை நின்றவன்.

இப்படி பல்வேறு மக்களைப் பாதிக்கும் ஆலைகளை எதிர்த்துப் போராடுவதால் எனது உயிருக்கு தினமும் பலரால் அச்சுறுத்தல் இருந்து வருகிறது.

என்னைத் தூக்கி கடத்தி வந்தவர்கள் சில மணி நேரத்தில் கூடன்குளம் காவல் நிலையம் கொண்டு வந்தனர். அங்கு வந்த பிறகுதான் தெரிந்தது என்னை தூக்கி கடத்தி வந்தவர்கள், குற்றப்பிரிவு காவலர்கள் என்று. கூடன்குளத்தில் வைத்துத்தான் வள்ளியூர் வாரண்டுக்காக என்னைத் தூக்கி வந்ததாகத் தெரிவித்தார்கள். ஆனால் கூடன்குளம் காவல்நிலையத்திலும் கைது செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்ட போதும் ‘நீதியரசர் டி..கே.பாசுவின், கைது செய்யப்படும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல் உத்தரவைப்’ பின்பற்றவில்லை.

என்னிடம் எந்த கையெழுத்தும் வாங்காமல் சுமார் இரவு 10 மணியளவில் என்னை கூடன்குளம் உதவி காவல் ஆய்வவாளர் உள்பட 5 பேர் அரசு காவல் வாகனத்தில் அல்லாமல் ஒரு தனியார் காரில் ஏற்றிச் சென்றனர். முதலில் கூடன்குளம் அரசு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சுமார் 1 மணி நேரத்திற்கு மேல் என்னை அமர வைத்துவிட்டு காவல்துறை உதவி ஆய்வாளர் எங்கேயோ புறப்பட்டு சென்று வந்தார்.

இரவு சுமார் 11 மணியளவில் தனியார் காரில் என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டு நள்ளிரவு சுமார் 12 மணியளவில் வள்ளியூர் நீதிமன்றம் வந்தனர். அங்கு 4 காவல்துறை வாகனத்தில் காவல்துறையினர் காத்திருந்தனர்.

வள்ளியூர் நீதிபதியிடம் நான், “காவல்துறையினர் என்னைப் பிடித்து இழுத்து தூக்கி சட்டவிரோதமாக கடத்திக்கொண்டு வரப்பட்டதையும், நீதியரசர் டி.கே.பாசு அவர்கள் கைது செய்யப்படும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல் உத்தரவை எதையும் பின்பற்றவில்லை” எனவும் தெரிவித்திருந்தேன். வள்ளியூர் நீதிபதி, நான் சொன்ன அனைத்தையும் கேட்டுக் கொண்டார். பதிவு ஏதும் செய்யவில்லை. பிறகு கூடன்குளம் உதவி ஆய்வாளரைப் பார்த்து, “முறையாக கைது குறிப்பாணையுடன் இதுவரை கொண்டு வாருங்கள். இவரது நண்பருக்கு கைது செய்யப்பட்டது பற்றி தகவல் தெரிவியுங்கள்” எனக் கூறி அனுப்பி வைத்தார்.

பின்பு என்னை வள்ளியூர் காவல் நிலையத்திலிருந்து நான்குநேரியில் உள்ள வள்ளியூர் நீதிபதியின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்கள். வள்ளியூர் நீதிபதி அவர்களிடம் நான், “கைது குறிப்பாணையில் ஸ்ரீவைகுண்டத்தில் வைத்து என்னை கைது செய்த நேரம் தவறாக காட்டப்பட்டுள்ளதை நீதிபதி பதிவு செய்ய வேண்டும் எனக் கூறினேன். அவரும் பதிவு செய்து கொள்வதாக கூறினார். மேலும் கூடன்குளம் மருத்துவமனையில் இருந்தபோது எனது காலில் அடிப்பட்டு இருந்தது தெரியவில்லை. இப்போது தான் வலிக்கிறது எனப் பார்க்கும்போது காவல்துறையினர் என்னைப் பிடித்து, இழுத்து தூக்கி வந்தபோது, அவர்கள் காலால் எனது காலை மிதித்ததால், 2 கால்களும் சரிந்ததால் ஏற்பட்ட காயம் தெரிகிறது என தெரிவித்தேன். அவர் சிறைக்குக் கூட்டிச் செல்லும் முன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பின்பு கூட்டிச் செல்லுங்கள்” என்றார். வள்ளியூர் நீதிபதியிடம் நான், ‘சிறையில் காலையில் மருத்துவரைப் பார்ப்பேன். அங்கே சிகிச்சை எடுத்துக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்தேன்.

நாங்குநேரியில் உள்ள வள்ளியூர் நீதிபதி வீட்டில் இருந்து புறப்பட்டு 19.9.2017 அதிகாலை சுமார் 3 மணியளவில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நான் ஒப்படைக்கப்பட்டேன்.

என்னை வாரண்ட் எதுவும் காட்டாமல் இலங்கை வெள்ளை வேன் கடத்தல்போல் என்னை தூக்கி கடத்தி வந்ததும் கைது செய்யும்போது நீதியரசர் டி.கே.பாசு, வழிகாட்டல உத்தரவு எதையும் மதித்து நடக்காமல் செயல்பட்டும், என்னை கொலை செய்ய கடத்துகிறார்களோ என்ற கடும் மனஉளைச்சலை மனப் பாதிப்பை எனக்கும், என்னை சார்ந்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுத்திய குற்றப் பிரிவைச் சேர்ந்த ஆறு காவல் துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டுமாய் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னை சட்டவிரோதமாக கடத்தி வந்த காவல்துறையினரின் அலைபேசியை பறிமுதல் செய்தும், அவர்கள் அலைபேசி பதிவில் உள்ள பேச்சை வைத்து அவர்களது நோக்கம் என்னை கடத்தி என்ன செய்வது யாருக்காக இதை செய்தார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். எனது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அம்பேத்கர் – பெரியார் குறித்த சர்ச்சைகள் தொடர வேண்டாம்!

அம்பேத்கர்-பெரியாரிடையே மோதலை உருவாக்கும் சதித் திட்டத்தை சங் பரிவாரங்கள் அரங்கேற்றி வருகின்றன. அந்த வலையில் உண்மையான கொள்கை உணர்வு கொண்ட பெரியார்-அம்பேத்கர் இயக்கங்கள் விழுந்துவிடக் கூடாது.

திரைப்பட இயக்குனர் ரஞ்சித் அளித்த ஒரு பேட்டியில், 'பெரியார் பெயரை உச்சரிக்கவில்லை' என்று முகநூலில் 'விவாதப்போர்' நடந்து வருகிறது. தலைவர்களின் பெயரை உச்சரிப்பது என்பதைவிட அந்தத் தலைவர்கள் இலட்சியங்களைப் பேசுகிறார்களா? என்பதுதான் முக்கியம்.

ஜாதி ஒழிப்புக் கருத்துகளைப் பேசும் ஒவ்வொருவரும் அம்பேத்கரிஸ்ட்டுதான்; பெரியாரிஸ்டுதான்.

அம்பேத்கரைப் பேசும்போது பெரியார் பெயரை ஏன் குறிப்பிடவில்லை என்று பெரியாரிஸ்டுகள் எழுப்பும் கேள்விகள் தேவையற்றவை என்பதே நமது கருத்து.

தலித் அல்லாதவர்களைவிட 'தலித்' மக்கள் ஜாதி ஒடுக்குமுறைக்குள்ளாகி வருகிறார்கள் என்பதே உண்மை. ஜாதிய ஒடுக்குமுறைக்குள்ளாகிறவர்களின் கூடுதலான உணர்வுகளையும் நியாயங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளும் பக்குவம் பெற்றவர்களே பெரியாரிஸ்டுகளாகவும் இருக்க முடியும்.

சொல்லப் போனால் அம்பேத்கர், பெரியாரைப் பற்றி அதிகம் பேசாத நிலையில் பெரியார் தான் அம்பேத்கரைப் பற்றி பேசினார். அம்பேத்கரை எனது தலைவர் என்றார். இலட்சியத்துக்கு முன்னுரிமை தரும் எவரும் இலட்சியத்துக்கு மேலாக தலைவர்களை முன்னிறுத்திப் பார்க்கக் கூடாது என்பதே நமது கருத்து.

தோழர்கள் சர்ச்சைகளைத் தவிர்க்கக் கோருகிறோம்!

# கிருஷ்ணராயபுரத்தில் பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டம்



*6-1-2018 சனிக்கிழமை மாலை 6-00 மணியளவில், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம், கோவக்குளத்தில் பெரியாரின் 44ஆவது நினைவு நாள் பொதுக் கூட்டம், பேரூர்க் கழக ம.தி.மு.க. மாணவரணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.*

கூட்டத்துக்கு கரூர் மாவட்ட ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் பொறியாளர் காமராஜ் தலைமையேற்றார். தமது தலைமை உரையில் பெரியாரைப் பின்பற்றவேண்டிய தேவைகளை விளக்கியதோடு.கோவக்குளத்தில் பெரியாரின் நினைவு நாளன்று நிறுவப்பட்ட பெரியாரின் மார்பளவு சிலை வருவாய், காவல்துறையால் அகற்றச் செய்யப்பட்டதை எடுத்துரைத்ததோடு, அடுத்த பெரியார் நினைவு நாளுக்குள் அச்சிலை உரிய அனுமதியோடு நிறுவப்படும் என்பதை உறுதிபட எடுத்துரைத்தார்.

மாவட்ட ம.தி.மு.க.விவசாய அணித் துணைச்செயலாளர் மரு.முத்து வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் ம.தி.மு.க. மாநில மாணவரணி செயலாளர் மணவை தமிழ் மாணிக்கம், கரூர் பகுத்தறிவு மன்றத் தலைவர் வழக்குரைஞர் குடியரசு, த.பெ.தி.க. மாவட்டத் தலைவர் கு.கி.தனபால், ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் முல்லையரசு, தி.மு.க. பேரூர்க் கழக செயலாளர் எம்.மகாலிங்கம் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கழகத் தலைவர் தனது உரையில், பார்ப்பனர்கள் தங்கள் சமூக மேலாதிக்கத்தைக் கட்டிக் காப்பாற்ற உருவாக்கிய இந்து மதக் கட்டுமானத்தை, அதனை உறுதி செய்ய எழுதிவைத்த சாஸ்திரங்களை, விளக்குவதற்கு உண்டாக்கிய புராணங்களை விளக்கியதோடு, எதிர்க் கேள்விகள் எழாமலிருக்க - பார்ப்பனரல்லாத மக்கள் கல்வி பெறாமல் தடுத்து வைத்திருந்த சூழ்ச்சிகளை விளக்கினார். புராணகாலத்தில் தொடங்கிய இந்த சூழ்ச்சிகள் நவீன அரசியல் காலகட்டத்திலும் ராஜகோபலாச்சாரியின் கிராமப்புற பள்ளிகளை மூடியது, இந்தித் திணிப்பு, குலக் கல்வித்திட்டம், நீட் தேர்வு, நவோதயா பள்ளி, இந்திய அளவிலான தேர்வுகள் போன்ற திட்டங்கள் வழியாகத் தொடர்வதை விளக்கிக் கூறினார். அச்சூழ்ச்சிகளை முறியடிக்க உருவான பார்ப்பனரல்லாதார் இயக்கம், பெரியார் ஆகியோரின் சமூக நீதிப் போராட்டங்கள், இப்போது தமிழ்நாட்டின் பணி வாய்ப்புகளிலும் வடநாட்டாரை நுழைக்க ஏற்படுதியுள்ள சதிகளை எடுத்துரைத்து, அவற்றை எதிர்கொள்ள நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளையும் விளக்கிப் பேசினார். ஒன்றிய ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் பொறியாளர் கணேசமூர்த்தி நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

கூட்டத்துக்கு வந்த தலைவர்களை தாரை தப்பட்டையோடு வரவேற்பளிக்கப் பட்டது. கிராம மக்களைப் பெருமளவில் திரட்டியிருந்த பாங்கு போற்றத்தக்கதாய் இருந்தது. கூட்டத்தில் கரூர் மாவட்ட தி.வி.க தலைவர் முகமது அலி, சின்ன தாராபுரம் சண்முகம், அறிவியல் மன்ற அமைப்பாளர் மலைக்கொழுந்து உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

# 'குடிஅரசு' வழக்கு: 'விடுதலை'க்கு ஒரு விளக்கம்

பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிட்டதை எதிர்த்து ரூ.15 இலட்சம் இழப்பீடு கேட்டார் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார இயக்கச் செயலாளர் கி.வீரமணி அவர்கள்.

'குடிஅரசு' வெளியீட்டுக்கு இடைக்காலத் தடை இல்லை என்று உயர்நீதிமன்றம், உயர்நீதிமன்ற அமர்வு, உச்சநீதிமன்றம் வரை அறிவித்த பிறகும் இழப்பீடு கேட்கும் பிரதான வழக்கை அவர்கள் கைவிடத் தயாராக இல்லை.

**2010க்குப் பிறகு மீண்டும் அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தவே விரும்புகிறார்கள் என்பதையே 'புரட்சிப் பெரியார் முழக்கம்' 'மீண்டும் வழக்கு' என்று செய்தியாக வெளியிட்டது.**

"மீண்டும் நாங்கள் புதிய வழக்கைப் போடவில்லை; 'புரட்சிப் பெரியார் முழக்கம்' தவறான செய்தியை வெளியிடுகிறது" என 'விடுதலை' ஏடு மறுத்துள்ளது.

'குடிஅரசு' வெளியீட்டுக்கு தடை இல்லை என்ற தீர்ப்புகள் வந்த பிறகும் வழக்கை அத்துடன் முடித்துக் கொள்ளாமல், பழைய வழக்கை பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தோண்டி எடுத்துத் தொடருவதை, 'மீண்டும் வழக்கு' என்று குறிப்பிடுவதில் என்ன தவறு?

பழைய வழக்கின் கோரிக்கைகளை மாற்றி புதிய கோரிக்கைகளோடு 'மீண்டும்' வழக்கைத் தொடர அவர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகியதை மறுக்க முடியுமா? அதை உயர்நீதிமன்றம் நிராகரித்தது என்பதையும் மறுக்க முடியுமா? பல மாதங்களுக்கு முன்பே புதிய கோரிக்கையுடன் அவர்கள் நீதிமன்றம் வந்தபோது தோழமை - நாகரிகம் கருதியே 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் நாம் அந்த செய்தியை வெளியிடாமல் தவிர்த்தோம்.

அதுவும்கூட 2018 ஜனவரி 4ஆம் தேதி அன்று உயர்நீதிமன்ற விசாரணைக்கு வந்ததால்தான் அந்த செய்தியை இப்பொழுது வெளியிட்டோம்.

இந்த நிலையில் 'மீண்டும்' என்ற வார்த்தையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பயன்படுத்தியதில் இவர்கள் ஏன் வருத்தமடைய வேண்டும்? தாங்கள் செய்த பழைய தவறை மீண்டும் புதிய தவறாக ஏன் திரிக்கிறீர்கள் என்பதுபோல் இருக்கிறது, இவர்களின் வாதம்!

'வரவு செலவு கணக்கை பெரியார் திராவிடர் கழகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை' என்று எழுதியிருக்கிறது, 'விடுதலை'.

'குடிஅரசு' வெளியீட்டு உரிமை கிடைத்த அடுத்த நாளே 'குடிஅரசு' தொகுப்பை இணையத்தில் ஏற்றி எவர் வேண்டுமானாலும் இலவசமாகப் 'பதிவிறக்கம்' செய்யலாம் என்று அறிவித்துவிட்டது பெரியார் திராவிடர் கழகம். பெரியார் சிந்தனைகளைப் பரப்ப வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கமே தவிர, அதை விற்பனைச் சரக்காக மாற்ற வேண்டும் என்பது அல்ல.

இன்று பெரியார் நூல்கள் புத்தகச் சந்தைகளில் ஒவ்வொரு கடைகளிலும் நிரம்பி வழிகிறது என்றால், அது பெரியார் திராவிடர் கழகம் வழக்கின் மூலம் பெற்றுத் தந்த உரிமைதான்.

மானமிழந்த சமுதாயத்துக்கு சுயமரியாதை எனும் இழப்பீட்டைப் பெற்றுத் தந்த தலைவர் பெரியார்!

அந்த பெரியாரின் சிந்தனைகளைப் பரப்ப வேண்டும் என்று செயல்படும் இயக்கத்திடம் - அந்த "குற்றத்துக்காக" ரூ.15 இலட்சம் பணத்தை இழப்பீடு கேட்கிறது - பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்.

இதைச் சுட்டிக்காட்டினால், கோபம் வருவது ஏன்? 'மீண்டும்' என்பதற்காக வருத்தப்படும் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், "பெரியார் நூல்களை எவரும் வெளியிடலாம்; மீண்டும் வழக்குகள் ஏதுமில்லை" என ஒரு அறிவிப்பை வெளியிடலாமே! அதை செய்யாமல் மீண்டும் மீண்டும் மீண்டும் அதே தவறைத் தொடரலாமா?

**தோழர்களுக்கு தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th January 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN